## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.
## சி.சி.44/2017

2023ம் ஆண்டு ஜுன் மாதம் 13ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.4 வது நபாின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பன்னீர்செல்வம் | வயது | 59 |
| த.பெ.(அ)க.பெ. | முத்துகவுண்டர் | தொழில் | விவசாய கூலி வேலை |
| ஊர்/பணிபுரியுமிடம் | பெருமாபட்டு | சமயம் | இந்தியன் |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

**முதல் விசாரணை : எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை .**

நான் திருப்பத்துரில் பெருமாப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலியாக உள்ளேன். கடந்த 2017 ம் ஆண்டு தேதி மாதம் நினைவில்லை, எங்கள் ஊரில் நடந்த சண்டை சம்மந்தமாக போலிசார் ஊருக்கு வந்து விசாரித்தார்கள். விசாரித்தற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.** கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையொப்பம் எதற்காக போட்டேன் என்று தெரியாது. **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோாியதன் போில் மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

போலீஸார் சம்பவயிடத்திற்கு வந்து விசாரணை செய்த சமயம் என் முன்னிலையில் மரத்தடி ஒன்றை மகஜர் மூலம் கைப்பற்றினார்கள் என்றும், அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் போட்டேன் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது, போலீஸார் கேட்டுக்கொண்டதால் நான் கையொப்பம் போட்டேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

சம்பவம் நடந்த இடத்தில் நிறைய வீடு உள்ளது என்றால் சரிதான். போலீஸார் கொடுத்த எழுதாத வெள்ளைதாளில் தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என் முன்பாக படம் எதுவும் வரைந்து ஆவணம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை = இல்லை

**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி.44/2017</u>**

2023ம் ஆண்டு ஜுன் மாதம் 13ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3 வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | வயது | 41 |
| த.பெ.(அ)க.பெ. | சன்முகம் | தொழில் | கம்பி கட்டும்வேலை |
| ஊர்/பணிபுரியுமிடம் | பெருமாபட்டு | சமயம் | இந்தியன் |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

**<u>முதல் விசாரணை :</u> எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை .**

நான் திருப்பத்துரில் பெருமாப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கம்பி கட்டும் வேலை செய்கிறேன். கடந்த 2017 ம் ஆண்டு தேதி மாதம் நினைவில்லை, எங்கள் ஊரில் நடந்த சண்டை சம்மந்தமாக போலிசார் ஊருக்கு வந்து விசாரித்தார்கள். விசாரித்தற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையொப்பம் எதற்காக போட்டேன் என்று தெரியாது. **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரியதன் பேரில் மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

போலீஸார் சம்பவயிடத்திற்கு வந்து விசாரணை செய்த சமயம் என் முன்னிலையில் மரத்தடி ஒன்றை மகஜர் மூலம் கைப்பற்றினார்கள் என்றும், அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் போட்டேன் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது, போலீஸார் கேட்டுக்கொண்டதால் நான் கையொப்பம் போட்டேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

சம்பவம் நடந்த இடத்தில் நிறைய வீடு உள்ளது என்றால் சரிதான். போலீஸார் கொடுத்த எழுதாத வெள்ளைதாளில் தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என் முன்பாக படம் எதுவும் வரைந்து ஆவணம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை = இல்லை